இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

‘விழிப்பாயிருங்கள்; ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது. இரவில் எந்தக் காவல் வேளையில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளருக்குத் தெரிந்திருந்தால் அவர் விழித்திருந்து தம் வீட்டில் கன்னமிடவிடமாட்டார் என்பதை அறிவீர்கள். எனவே நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்.” (மத் 24:42-44)

# நடைபெற்று முடிந்த, ஆசிய ஆயர்கள் பேரவைகளின் கூட்டமைப்பு, FABC 50-ன் நிறைவுச் செய்தி

**பெங்காக்:** அக்டோபர் 30, 2022 அன்று, ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பு, FABC 50-ன் இறுதிச் செய்தியை இங்குள்ள அமல உற்பவி பேராலயம் வெளியிட்டது.

ஆசிய இறைமக்களே, ஆசியாவில் உள்ள கத்தோலிக்க திருஅவையின் ஆயர்களாகிய நாங்கள், இந்த மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் ஒற்றுமையின் செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். 17 ஆயர்கள் பேரவைகளையும் மற்றும் ஓரியண்டல் திருஅவைகளின் இரண்டு ஆயர்கள் பேரவைகளையும் உள்ளடக்கிய ஆசிய ஆயர்கள் பேரவை கூட்டமைப்பு (FABC) மூலம் ஆசியா மீது கடவுள் பொழிந்துள்ள ஆசீர்வாதங்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.

**‘ஆசிய மக்களாக இணைந்து பயணித்தல்’** என்பது நடந்து முடிந்த நமது பேரவையின் கருப்பொருளாக இருந்தது. இப்பொன் விழா பேரவையில் கடந்த 50 ஆண்டுகால எங்களது பயணத்தை மீண்டும் உறுதிப்படுத்தவும், ஆசிய திருஅவைக்குப் புத்துயிர் ஊட்டவும், பணிக்கான புதிய வழிமுறைகளைப் பற்றி சிந்திக்கவும் முயன்றோம். தொடக்க விழாவின் போது தாய்லாந்து அரசு பண்பாட்டுத்துறை அமைச்சர் முன்னிலையில் எங்கள் 50-வது பொதுப் பேரவையை கௌரவித்ததற்காகவும், அன்பான வரவேற்பிற்காகவும் தாய்லாந்து அரசுக்கு நாங்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். FABC 50 பொது பேரவை சிறப்பாக நடத்திய தாய்லாந்தின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்குக் குறிப்பாக பாங்காக் மறைமாவட்டத்திற்கு எங்களது ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்

திருத்தந்தை மற்றும் அழைக்கப்பட்ட பிற ஆயர்கள் பேரவைகளின் பிரதிநிதிகள் எங்களுடன் இருந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். இறைவேண்டல், செவிசாய்த்தல், பகுத்தறிதல் மற்றும் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றின் பயனுள்ள காலமாக இப்பேரவை காலம் அமைந்தது.

மாநாட்டில் எங்கள் கருத்துப்பரிமாற்றங்கள் மூலம், நாங்கள் ஆசியாவின் ஆன்மாவைத் தொட்டோம். அதே சமயம், ஆசியாவிலுள்ள மறைமாவட்டங்களோடு இணைந்து பயணிப்பதற்கும், சிறந்த ஆசியாவுக்காக அதிக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கும் வெளிப்படுதப்பட்ட நம்பிக்கை, தைரியம் மற்றும் உறுதியால் நாங்கள் ஈர்க்கப்பட்டோம்.

ஆசியாவில், உதவிக்காகவும் நீதிக்காகவும் உதவிக்கேட்டு கூக்குரலிடுவதைக் கேட்கும் இப்பன்முகக் கண்டத்தின் வெவ்வேறு குரல்கள் எங்களுக்கு பெரும் சவாலாக ஒலித்தது. அவற்றுள்:

- கண்ணியமான வாழ்க்கைக்காக ஏங்கும் ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் ஒதுக்கப்பட்டவர்களின் துன்பங்கள், உண்மையான மனித கண்ணியம் மற்றும் பாதுகாப்பான இடங்களைத் தேடும் அகதிகள், புலம்பெயர்ந்தோர், இடம் பெயர்ந்த மற்றும் பழங்குடி மக்களின் வேதனைகள்.
- சுரண்டல், காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் ஆகியவற்றின் பாதிப்புகளுடன் இயற்கையும் இன்னும் அதிக அளவு பராமரிக்கப்பட வேண்டும் என்று கெஞ்சுகிறது,
- திருஅவையிலும் சமூகத்திலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புகளைத் தேடும் இளைஞர்களின் கனவு,
- தங்கள் கண்ணியத்தை மதிக்கும் மற்றும் தங்களின் சரியான இடத்தை அங்கீகரிக்கும், சிறந்த மற்றும் அனைவரிடமிருந்தும் அதிக ஆதரவை எதிர்பார்க்கும் பெண்களின் குரல்கள் மட்டில் நாங்களும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். டிஜிட்டல் புரட்சி நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் பாதித்தது இறை மக்களை பாதித்து வருவதையும் அறிய முடிந்தது.

இறைவேண்டல் மற்றும் கடவுளின் பேருதவியை நம்பி மேற்கண்ட சவால்களுக்குப் பதிலளிக்க விரும்புகிறோம். ஆசியாவில், அமைதியும் நல்லிணக்கமுமே முன்னோக்கி செல்ல ஒரே வழி என்று நாங்கள் நம்புகிறோம். நெருங்கிய உறவு, செவிமடுத்தல் மற்றும் உண்மையான பகுத்துணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் எங்கள் ஊழியத்திற்கான புதிய பாதைகளை நாங்கள் வகுத்துள்ளோம்.

தேவையில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியுடன் சேவை செய்ய அழைக்கப்பட்டுள்ளோம்.

"பூமியின் அழுகை மற்றும் ஏழைகளின் அழுகை ஆகிய இரண்டிற்கும்" சாதகமாக பதிலளிக்க மேய்ப்புப்பணிகளின் மாற்றத்திற்கு நாங்கள் அழைக்கப்பட்டுள்ளோம்.

நேர்மையான உரையாடல் வழியாகவும் பிறருக்குச் செவிமடுப்பதன் வழியாகவும் நல்லிணக்கத்திலும் அமைதியிலும் நாங்கள் வாழ விரும்புகிறோம்.

மற்ற சமயங்கள் மற்றும் மரபுகளைச் சேர்ந்த நமது சகோதர சகோதரிகளுடன் இணைந்து அமைதி மற்றும் நல்லிணக்க கலாச்சாரத்தை மேம்படுத்த நாங்கள் முயல்கிறோம்.

சமயங்கள் மற்றும் மரபுகளுக்கு இடையே மட்டுமல்ல, மனித உரிமைகள், வறுமை ஒழிப்பு, மனித கடத்தல், பூமியின் பராமரிப்பு மற்றும் பிற பொதுவான கவலைகள் போன்றவற்றில் அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளுடன் கொள்கை ரீதியான ஈடுபாட்டின் மூலம் உறவுகளை மேம்படுத்த நாங்கள் எங்களை அர்ப்பணிக்கிறோம்.

இந்தத் தீர்மானங்களில் ஒன்றாகப் பயணிப்பதன் மூலம், நாங்கள் உலகிற்கு அதிக அர்ப்பணிப்புடன் சேவை செய்ய இயலும் என்று நம்புகிறோம். ஆசியாவில் உள்ள கத்தோலிக்க திருஅவை எப்போதும் ஒரு சிறந்த ஆசியாவிற்காகவும், நமது மக்கள் அனைவரின் நலனுக்காகவும் பாடுபடும் என்று இந்த கண்டத்தில் உள்ள நமது இறைமக்களுக்கு நாங்கள் உறுதியளிக்கிறோம். உங்கள் இறைவேண்டல்களில் எங்களை நினைவில் கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம். நிறைவாக, மனித குடும்பம் மற்றும் அனைத்து படைப்புகளுக்கான சேவையில் நாங்கள் இணைந்து, ஒன்றாக பயணிக்கிறோம் என்பதை உறுதியாக அறிவிப்பதில் மகிழ்கிறோம்.

*கர்தினால் சார்ல்ஸ் மௌங் போ SDB*



*50-வது ஆசிய ஆயர்கள் கூட்டுப் பேரவையில் பங்கேற்ற கர்தினால்கள், பேராயர்கள் மற்றும் ஆயர்கள்*

## கிள்ளானில் ‘மரணமும் நிலைவாழ்வும்’ தலைப்பில் சொற்பொழிவு நடைபெற்றது

கிள்ளான்: அருள்தந்தை டேவிட் ரீகன் Cap அவர்களின் “நிறைவாழ்வு (மரணம், தீர்ப்பு, விண்ணகம் மற்றும் நரகம்)” என்ற தலைப்பில் நடந்த சொற்பொழிவின் இரண்டாம் பகுதி. நவம்பர் 12 அன்று இங்குள்ள புனித லூர்து அன்னை சமூக மண்டபத்தில் நடைபெற்றது. மரணம் குறித்த முதல் அமர்வில் கலந்து கொள்ளாதவர்களின் நலனுக்காக, மரணத்திற்குப் பிறகு நாம் எங்கு போகக்கூடும் என்பதை முன்னிலைப் படுத்துவதற்காக டேவிட் ரீகன் செல்வந் தரும் லாசரும் தலைப்பிலான உவமையுடன்



*சொற்பொழிவாற்றும் அருள்தந்தை டேவிட் ரீகன்*

தொடங்கினார்

அன்று சொற்பொழிவைத் தொடங்குவதற்கு முன், பங்கேற்பாளர்களை அவர்களின் இறுதி இலக்குக்கான சிந்தனை உள்ளதா என்பதைப் பற்றி சிந்திக்க அவர் அழைத்தார், மேலும் அவர்கள் இறந்த பிறகு எங்கு செல்வார்கள் என்பதை உறுதியாக அறிந்துள்ளனரா? என்பது பற்றியும் சிந்திக்கத் தூண்டினார்.

மரணத்திற்குப் பின் வாழ்வில், ஆன்மாக்கள் எங்கு செல்கின்றன என்பதை விவரிக்க எபிரேய மொழியில் பயன் படுத்தப்படும் சொற்களான ‘க்வெவர் மற்றும் ஷூல்’

-தொடர்ச்சி அடுத்துப் பக்கம்

# கிள்ளானில் ‘மரணமும் நிலைவாழ்வும்’ தலைப்பில் சொற்பொழிவு நடைபெற்றது

(முதல் பக்கத் தொடர்ச்சி)

(Qever and Shoel) மற்றும் கிரேக்க மொழியில் பயன்படுத்தப்படும் சொல்லான ‘ஹேடிஸ்’ (Hades) ஆகிய வெவ்வேறு சொற்களை அருள் தந்தை விவரித்தார். மரணம் நிகழும் தருவாயில் உள்ளவர்களின் அனுபவங்களைப் பற்றி பல்வேறு நபர்களால் வெளியிடப்பட்ட பல காணொளிகள் மற்றும் தகவல்கள் இருந்தாலும், கத்தோலிக்கர்கள் எப்பொழுதும் திருஅவையின் போதனைகள் மற்றும் இறையியல் போதனைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் எச்சரித்தார்.

1. மறைஞானிகள் மற்றும் புனிதர்கள் – அவர்கள் வழி வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள்:
2. எப்போதும் சமய போதனைகளை அடிப்படையாகக் கொண்ட திருஅவை தந்தையர்கள்:
3. அதிகாரப்பூர்வ கத்தோலிக்க நிலை வாழ்வு பற்றிய போதனைகள் ஆகியவை எடுத்துரைக்கும் போதனைகளே நமக்கு தலைசிறந்தவை என்று அருள்தந்தை கூறினார்.

‘உத்தரிக்கிற ஸ்தலம்’ என்று அழைக்கப் படும் துன்புறும் ஆன்மாக்கள் தூய்மை பெறும் நிலையானது, ஒரு மருத்துவமனை மற்றும் சிறைச்சாலை போன்றது என்று அவர் விளக்கினார். ஆகவே,

1. மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையில் நமது நம்பிக்கை மற்றும் எதிர் நோக்கை வலுப்படுத்த,
2. பிரிந்த ஆன்மாக்களுக்கான தூய்மைப் படுத்தும் செயல்முறையின் ஒரு பகுதியாக மற்றும்
3. மறைநூல் வலியுறுத்துவதைப்போல நாம் இறைவேண்டல் வழி மன்றாட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நிறைவாக, பங்கேற்றவர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அருள்தந்தை டேவிட், கடவுள் நாம் அவருடைய மகனைப் போல இருக்க விரும்புகிறார், எனவே நாமும் அவருடைய மகனைப் போல துன்பப்பட வேண்டும் என்றும் கூறினார். இயேசு தம்முடைய முதல் திருத்தூதர்களை மனிதர்களைப் பிடிப்ப வர்களாக அழைத்து போல, மற்றவர் களை இயேசுவிடம் கொண்டுவருவதே நமது நோக்கம். அந்த அமர்வின் போது, உண்மையான இறைவேண்டல் அமைதிக்கு வழிவகுக்கும் என்று அவர் பகிர்ந்து கொண்டார் - நாம் அமைதியாக உட்கார்ந்து, மௌனமாகத் தியானிக்க வேண்டும். தியானத்தின் வழியாக தூய்மை பெறுகிறோம். தூய ஆவியானவர் நம்மில் செயலாற்ற நாம் அனுமதிக்க வேண்டும் என்று மேலும் தெளிவுப்படுத்தினார். இறுதியாக, கடவுளுடைய வார்த்தை நம்மைத் தூய்மைப்படுத்தி முன்னேற வழிவகுக்கும் என்று சொற்பொழிவை நிறைவு செய்தார்.




**கிறிஸ்தவர்கள், இருள்படர்ந்த சூழலுக்கு மத்தியில் நம்பிக்கையின் மெழுகுதிரிகளை எரியவிடவேண்டும்!**

**திருத்தந்தை பிரான்சிஸ்**

# ‘உங்கள் இதயங்களைக் கலங்க விடாதீர்கள்’

## ஆயர், டத்தோ கொர்னிலியூஸ் பியோங் திருவருகைக்கால செய்தி



கிறிஸ்துவில் என் அன்பான சகோதர சகோதரிகளே.

உலக அரசர் ஞாயிறு என்பது நமது திருஅவை வழிபாட்டு நாள்காட்டியின் மூன்றாம் ஆண்டின் உச்சமாகும். நவம்பர் 27, 2022, இன்று திருவருகை காலத்தின் முதல் ஞாயிறு தொடங்குகிறது.

திருவருகை காலம் இரு நோக்கங்களைத் தன்னுள் கொண்டுள்ளது. முதலாவதாக, திருவருகை காலம் என்பது கிறிஸ்மஸ் அல்லது இயேசு பிறப்பு பெருவிழாவைக் கொண் டாடுவதற்கான தயாரிப்பு காலம். இதன் மூலம் இயேசுவின் முதல் உலக வருகையை நாம் நினைவுகூர்கிறோம், இரண்டாவதாக, இந்த திருவருகை காலம் இயேசுவின் இரண்டாம் வருகையை நினைவுகூர்வதற்கான ஒரு வாய்ப்பாக உள்ளது.

இவ்வாறு திருவருகை காலம் என்பது இறைவனின் இரக்கத்தைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாகும், மேலும் இயேசுவின் மீதான நம்பிக்கை, எதிர்நோக்கு மற்றும் அன்பைப் புரிந்துகொள்வதற்கும் வெளிப் படுத்துவதற்குமான காலம் என்றும் பொருள் கொள்ளலாம்.

இம்மானுவேல், "கடவுள் நம்மோடு இருக் கிறார்" (மத். 1:23) என்ற இயேசுவோடு மீண்டும் ஒன்றிணைவதற்கு இந்த திருவருகை காலம் நமக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கியதற்கு நாம் உண்மையில் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இந்த திருவருகை காலம், கடவுளின் தலையீடு மற்றும் நம் நடுவில் உடனிருப்பதற்காக நமது நன்றியைத் தெரிவிக்கவும் நமக்கு ஒரு நல்ல வாய்ப்பாகும் (யோவான் 1:14).

சகோதர சகோதரிகளே, இன்றைய மெய்நிகர் (virtual) உலகம், தொழில்நுட்ப வளர்ச்சியின் அலைகளால், நம் நேரத்தை அதிகம் எடுத்துக்கொள்கிறது என்றால் மிகையாகாது. அதனால் நாம் நிலைதடு மாறுகிறோம். மேலும் கடவுளுக்கும், நம் அண்டை அயலார்கள் மற்றும் அவருடைய படைப்புகள் மீது அன்பு செலுத்த நமக்கு போதிய நேரமில்லாமல் போகிறது. எனவே, இந்த திருவருகை காலத்தில் 'விழிப்புடன் இருக்க' நாம் ஒரு புதிய அணுகுமுறையைத் தேர்வுச் செய்ய வேண்டும்.

'ஒன்றித்து பயணிக்கும் மக்களாக', நமது கிறிஸ்தவ அடையாளத்தை அறிந்து, பெருமைப்பட்டு, கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகிரும் நமது பணியை உறுதிசெய்து, "வழியும், உண்மையும், வாழ்வும் நானே" என்று இயேசு அளித்த உறுதிமொழியில் நம்பிக்கையுடன் இருப்போம் (யோவான். 14:6).

'திருஅவையின் உறுப்பினர்களாகிய நாம், எங்கிருந்தாலும் கடவுளுடைய அரசில் பணி செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். எனவேதான், அமைதியும், அன்பும், நீதியும் நம் வாழ்க்கையை ஆட்கொள் கின்றன. நாம் ஒவ்வொருவரும் நமது சக மனிதர்களின் நலன் மீதும், கடவுளின் படைப்புக்கள் மீதும் பொறுப்பேற்க அழைக்கப்பட்டுள்ளோம், ஆதலால், நம்மிலும், நம் குடும்பத்திலும், நம் சமூகத்திலும் கடவுள் இல்லாதிருந்தால், நாம் நமது பொறுப்புகளை நிறைவேற்று வதில் முன்னேறிச் செல்ல இயலாது.

சகோதர சகோதரிகளே, தனிப்பட்ட முறையில் குடும்பம், சமூகம், அடிப்படை திருஅவை சமூகம் மற்றும் பங்கு என ஒன்றிணைந்து, நம் இதயங்களில் இயேசுவுக்கு ஒரு இடத்தைக் கொடுக்க, அவர் மட்டுமே கடவுளின் அன்பின் வெளிப்பாடு என்பதால், திருவருகையின் ஆசீர்வாதத்தை நிறைவாகப் பெற முற்படு வோம். இதுவே நாம் எதிர்பார்க்கும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் ஆதார மாகவும், காரணமாகவும், நோக்கமாகவும் இருக்க வேண்டும்.

திருவருகை காலத்தின் நிறை ஆசீரோடு,
உங்கள் ஆயர்,
*டத்தோ கொர்னிலியூஸ் பியோங்*
*கெனிங்காவ் மறைமாவட்டம், சபா*

# ‘கவனமாயிருப்போம் விழிப்பாயிருப்போம்’

சென்ற வாரம் இயேசு கிறிஸ்து உலக அரசர் பெருவிழாவோடு திருவழிபாட்டின் மூன்றாம் ஆண்டினை நிறைவு செய்தோம். இன்று திருவருகைக்காலத்தின் முதல் வாரத்தில் அடியெடுத்து வைக்கி றோம். இது ஓர் எதிர்நோக்கின் காலம். இந்த எதிர்நோக்கைப் போலத்தான் இஸ்ர யேல் வெகு காலமாக காத்துக்கொண் டிருந்தார்கள். எதற்காக? மெசியா வருவார்; யூத மக்களை எல்லாவித துன்பத்திலிருந்தும் விடுவிப்பார் என்பதற்காக. இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா மகிழ்ச்சி நிறைந்த வாக்குறுதிகளை மக்களுக்கு எடுத்துக்கூறுவதைப் பார்க்கின் றோம். எருசலேமிலிருந்து ஆண்டவரின் வாக்கு புறப்படும். இனி போர் இல்லை. போர்க்கருவிகள் எல்லாம் உழவுக்கருவி களாக மாற்றப்படும். இனி துயரம் இல்லை, என்று முழங்குவதைக் கேட்கிறோம்.

இரண்டாவது வாசகத்தில் புனித பவுல், இருளுக்குரிய அனைத்தையும் களைந்து விட்டு ஒளியின் ஆட்சிக்குரியதை அணிந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றார். தீய இச்சைகளுக்கு இடம் தராமல், இயேசு கிறிஸ்துவையே அணிந்துகொள்ளுமாறு அறிவுறுத்துகின்றார். இயேசுவோ, இன்றைய நற்செய்தியில் இரண்டு குறிப்புகளைத் தருகின்றார். முதலாவதாக, நோவாவின் காலத்தில் வெள்ளப்பெருக்கு வரும்வரை மக்கள் கடவுளை நினையாமல் உண்டுக் குடித்து, களியாட்டம் புரிந்தனர். அதனால் வெள்ளத்தினால் பாவம் செய்தோர் அழிக்கப்பட்டனர் என்றும், இரண்டாவதாக, மனுமகனின் வருகை நாம் நினையாத நேரத்தில் நிகழும் என்பதால், தயாராய் இருக்கவும் எச்சரிக்கின்றார்.

இன்றைய வாசகங்கள் அனைத்தும், இன்று நாம் ஏற்றும் முதல் திருவருகைக் கால மெழுகுத்திரிக்கு மிகவும் ஒத்ததமையாக உள்ளது. ஏனென்றால் இன்று ஏற்றும் முதல் ஊதா நிற மெழுகுத்திரி, இறைவாக் கினரின் மெழுகுத்திரி என்றும் அழைக்கப் படுகிறது. வரவிருக்கும் மெசியாவைப் பற்றி மக்களுக்கு முன்னறிவித்தவர்கள் இறைவாக்கினர்களே. எனவே பழைய ஏற்பாட்டுக் காலம் தொடங்கி திருமுழுக்கு யோவான் வரை எல்லா இறைவாக்கினர் களும், "விழித்திருங்கள், தயாராய் இருங்கள், காத்திருங்கள்" என்றுதான் அறிவுறுத்திக் கொண்டே இருந்தார்கள்.

இப்போது மெசியாவின் வருகை நிறைவுற்று, அவரின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கும் நாம் எவ்வாறு ஒளிக்குரிய மக்களாக வாழப்போகிறோம்? இந்த உலகின் மக்களைப் போல வீட்டு அலங்காரம், உடை, உணவு என்று உலகைச் சார்ந்த வாழ்வு வாழப் போகிறோமா? அல்லது ஒளிக்குரிய மக்களாக, பகலுக்குரிய மக்களாக, அவர் எந்த நேரத்தில் வந்தாலும், தயாராய் இருக்கும் மக்களாக இருக்க நம்மை தயாரிக்க உள்ளோமா?

சுகபோகமே நம்முடைய வாழ்வாக இருந்தால், ஆண்டவர் வரும் நாள் தண்டனையின் நாளாகப் போய்விடும்.

எனவே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்துவின் வருகை நிகழ்ந்ததுபோல, அவர் உலகமுடிவிலும் மீண்டும் வருவார்; அந்த வருகையின்போது நாம் சந்திக்கவிருக்கும் கிறிஸ்துவுக்காக, என்றுமே தயாராய் இருக்க இத்திருவருகைக் காலம் நமக்குத் தூண்டுதலாக அமையுமாறு இறைவேண்டல் செய்வோம். முயற்சி செய்வோம். 'நீங்கள் எதைச் செய்தாலும், கிறிஸ்துவின் அன்புக்காகச் செய்யுங்கள்' என்பார் புனித அல்போன்சா. எனவே, நாம் எப்பொழுது வேண்டுமானாலும் வரக்கூடிய மானிடமகனை நல்லமுறையில் எதிர் கொள்ளும் வகையில், எதைச் செய்தாலும் கிறிஸ்துவின் அன்புக்காகச் செய்வோம். நாம் கவனமாகவும் விழிப்பாகவும் இருக்கின்றோம் என்பதை, நாம் கிறிஸ்துவின் அன்புக்காகச் செய்யும் செயல்களால் நிரூபிப்போம்.

*-ஜோசப்பின் போஸ்கோ , சிரம்பான்.*

**திருவருகை காலம்-முதல் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எசா 2: 1-5 |
| தி. பாடல்: | 122: 1-2. 4-5. 6-7. 8-9 |
| 2ம் வாசகம்: | உரோ 13: 11-14 |
| நற்செய்தி: | மத் 24: 37-44 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 1
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1
திருப்புகழ் மாலை- வாரம் 1